1st April 1965]

வளர்க்குமென்றும், நாட்டின் பல்வேறு பகுதி மக்களிடையே சிறப்பான, இயல்பான தொடர்பை ஏற்படுத்துமென்றும் வலியுறுத்தப்பட்டது.

4. மேற்சொன்ன முடிவுகளையொட்டி மத்திய அரசாங்கம் இப்போது அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

APPENDIY II.

[*Vide* answer to Starred Question No. 416 on page 728.]

(*a*) Yes.

(*b*) Comprehensive improvements to the existing water-supply schemes were drawn up in March 1955 comprising the following 3 parts :—

(1) Augmenting of the supply of Siruvani source ;

(2) Improving the take-off arrangements and treatment works, conveyance of supply to the town service reservoir ; and

(3) Redistribution, redesigning of the existing distribution within the town including Service Reservoirs.

Items of works in parts (2) and (3) have been completed. Part (1) of the Scheme which contemplates the construction of a storage reservoir 300 feet downstream side of the present dam across the Siruvani river will be taken up for investigation after the concurrence of the Government of Kerala to the proposal is received.

(அ) ஆம்.

(இ) தற்போதுள்ள தண்ணீர் வழங்கும் முறையில் விரிவான மேம்பாடுகள் செய்ய 1955-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் கீழ்க்காணும் மூன்று பகுதிகளைக் கொண்ட திட்டங்கள் வகுக்கப்பட்டன:—

(1) சிறுவாணி நீர் ஆதாரத்திலிருந்து நீர் வழங்குதலை விரிவாக்குதல்.

(2) தண்ணீர் எடுத்துச் செல்லுதல், சுத்தப்படுத்தும் வேலைகள், நகரத்திற்கு தண்ணீர் வழங்கும் நீர்த் தேக்கத்திற்குத் தண்ணீர் எடுத்துச் செல்லுதல் ஆகியவற்றை மேம்பாடு செய்தல்.

(3) தண்ணீர் வழங்கப்படும் நீர்த் தேக்கங்களுக்கும், நகரத்திற்குள் இப்போது நீர் வழங்கி வரும் அமைப்பு முறையைப் புதுப்பித்து புதிய இடங்களுக்கும் நீர் வழங்குதல்.

(2), (3) பகுதிகளில் உள்ள பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. தற்போது சிருவாணி ஆற்றின் குறுக்கேயுள்ள அணையின் கீழ்ப்புறத்தில் 300 அடி தொலைவில் நீர்த்தேக்கம் கட்டும் திட்டத்திற்கு கேரள அரசாங்கத்திடமிருந்து ஒப்புதல் கிடைத்ததும் திட்டத்தின் (1)-ம் பகுதி புலனாய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.